# هيثم بن محمد سرحان

ولا تقف ما ليس لك به علم
உமக்கு எதைப் பற்றி அறிவில்லையோ அதனைத் தொடர வேண்டாம். 17:36

واغضض من صوتك
உன் குரலைத் தாழ்த்திக்கொள். 31:19

ادفع بالتي هي أحسن
மற்றவர்கள் உனக்குச் செய்யும் ) தீமையை) நல்லதைக் கொண்டு (எதிர்கொண்டு) தடுத்துக் கொள்வீராக! 41:34

ولا تنابزوا بالألقاب
உங்களில் ஒருவருக்கொருவர் தீய பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொள்ளாதீர்கள். 49:11

اجتنبوا كثيرا من الظن
மற்றவர்களைப் பற்றிய) ) அதிகமான (தப்பான) எண்ணங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். 49:12

وأطعموا البائس الفقير
சிரமப்படும் ஏழைகளுக்கு உணவளியுங்கள். 22:28

وقولوا قولا سديدا
சரியான வார்த்தையையே சொல்லுங்கள். 33:70

واحفظوا أيمانكم
பொய் சத்தியம் செய்யாமலும், ) அவசியமின்றி சத்தியம் செய்யாமலும், சத்தியங்களை முறிக்காமலும்) உங்கள் சத்தியங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். 5:89

كونوا قوامين بالقسط
நீங்கள் மிகவும் நீதியை நிலைநாட்டக் கூடியவர்களாக இருந்து கொள்ளுங்கள். 4:135

ولا تلبسوا الحق بالباطل
உண்மையைப் பொய்யுடன் கலக்க வேண்டாம். 2:42

واخفض جناحك للمؤمنين
பணிவும், மென்மை எனும்) ) உனது இறக்கையை முஃமின்களுக்காக தாழ்த்துவீராக! 15:88

خذ العفو وأمر بالعرف.
மனிதர்களுடன் மன்னிப்புடனும் துருவி ) ஆராயாமலும் சிரமம் கொடுக்காமலும்) தாராளத் தன்மையைக் கைக் கொள்வீராக! [நல்லதை ஏவுவீராக! 7:199

ولا تأكلوا أموالكم بينكم بالباطل
உங்களுக்கு மத்தியில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். 2:188

ولا تجسسوا
பிறர் குறைகளை) ) ஆராயாதீர்கள். 49:12

وبالوالدين إحسانا وذي القربى واليتامى
பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும் நல்லுபகாரம் செய்யுங்கள். 2:83

أنفقوا مما رزقناكم
நாம் உங்களுக்கு வழங்கியிருப்பவற்றிலிருந்து (நல்வழிகளில்) செலவிடுங்கள். 2:254

وتعاونوا على البر والتقوى
நல்ல விடயத்திலும் (இறைவனை) அஞ்சுவதிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொள்ளுங்கள். ரு:உ

وزنوا بالقسطاس المستقيم
நேரான (சரியான) தராசைக் கொண்டு நிறுத்துக்கொடுங்கள். 17:35

اعدلوا
நீதி செய்யுங்கள். 5:8

ولا تعثوا في الأرض مفسدين
பூமியில் கேடுவிளைவித்தவர்களாக அலையாதீர்கள். 2:6

ولا تصعر خدك للناس
பெருமையோடு) உன் முகத்தை ) மனிதர்களை விட்டும்திருப்பிக்கொள்ளாதே! 31:18

وأعرض عن الجاهلين
அறிவீனர்களைப் பொருட்படுத்தாது விட்டுவிடுவீராக! 7:199.

لا تبطلوا صدقاتكم بالمن والأذى
கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும்,(கொடுக்கப்பட்டவரை) நோவினை செய்தும் உங்கள் ஸதகஹ்களை (தான தர்மங்களின் நன்மைகளைப்) பாழாக்கி விடாதீர்கள். 2:264

ولا يغتب بعضكم بعضا
உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம். 49:12

وإذا حييتم بتحية فحيوا بأحسن منها
உங்களுக்கு (ஒரு வார்த்தையைக் கொண்டு) முகமன் கூறப்பட்டால், நீங்கள் அதை விட அழகான (வார்த்)தையைக் கொண்டு (பதில்) முகமன் கூறுங்கள். 4:86

وآتوا اليتامى أموالهم
அனாதை(கள் பருவ வயதை அடைந்தால் அவர்)களிடம் அவர்களின் பொருட்களை ஒப்படைத்து விடுங்கள். 4:2

ولا تعاونوا على الإثم و العدوان
பாவத்திலும் வரம்பு மீறலிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டாம். 5:2

وأوفوا الكيل إذا كلتم
நீங்கள் அளந்தால் அளவைப் பூர்த்தியாக அளவுங்கள். 17:35

ولا تعتدوا
வரம்பு மீறாதீர்கள். அல்குர்ஆன் 2:190

ولا تمش في الأرض مرحا
பூமியில் பெருமையாக நடக்க வேண்டாம். 17:37

واقصد في مشيك
உன் நடையில் (பெருமையின்றி) நடுத்தரத்தைக் கடைபிடி. 31:19

ادع إلى سبيل ربك بالحكمة والموعظة الحسنة
உம்முடைய இரட்சகனின் பாதையின் பக்கம் விவேகத்துடனும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப்பீராக! 16:12

لا يسخر قوم من قوم
ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தைப் பரிகாசம் செய்ய வேண்டாம். 49:11

ادخلوا في السلم كافة
முழுஇஸ்லாத்திற்குள்ளும் நுழைந்து விடுங்கள்.2:208

ولا تتبدلوا الخبيث بالطيب
ஹலால் எனும்) நல்லதற்கு ) மாற்றமாக (ஹராம் எனும்) கெட்டதை எடுத்துக்கொள்ளாதீர்கள். 4:2

وقولوا للناس حسنا
மனிதர்களிடம் அழகான (வார்)தையையே பேசுங்கள். 2:83

وأوفوا بعهد الله إذا عاهدتم
நீங்கள் உடன்படிக்கை செய்வீர்களானால், அல்லாஹ்வின் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். 16:91